இணைப்பு

[637-ம் பக்கத்தில் வினு எண் 614-இன் வெள்ளிக்குறியிட்ட விடையைக் காண்க.]

(a) இத்திட்டம் இராமநாதபுரம் மாவட்டத்தில் மட்டும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இக்கோட்டத்தின் கீழ் 25 சிறு அளவைக் குழுக்கள் உள்ளன. அவற்றில் 1 முதல் 9 வரை விருது நகரிலும் 10 முதல் 17 வரை காரைக்குடியிலும் 18 முதல் 25 வரை பரமக்குடியிலும் அமைக்கப்பட்டு முறையே சாத்தூர், திருப்பத்தூர், பரமக்குடி வட்டத்திலுள்ள கிராமங்களின் ஆய்வு பணியினை 1-10-1972, 1-11-1972 & 1-11-1973 முதல் நடத்தி வருகின்றன.

இராமநாதபுரம் மாவட்டத்தில் 1,530 ரெவின்யூ கிராமங்கள் உள்ளன. அவற்றில் பொறியியல் ஆய்வு சம்பந்தப்பட்ட வரை இதுவரை 187 கிராமங்களில் ஆய்வு முடிக்கப்பட்டுள்ளது. 32 கிராமங்களில் ஆய்வு நடைபெற்றுக் கொண்டுள்ளது. அதே போன்ற விவசாய ஆய்வைப் பொறுத்த வரையில் 99 கிராமங்களில் ஆய்வு முடிக்கப்பட்டு உள்ளது. 26 கிராமங்களில் ஆய்வு நடந்து கொண்டும் உள்ளது. ஆய்வு முடிக்கப்பட்டமைக்கும் ஆய்விலுள்ள கிராமங்களின் எண்ணிக்கைக்கும் வட்ட வாரியாக விபரங்கள் கீழே விவரிக்கப்பட்டுள்ளது:—

	பொறியியல் ஆய்வு		விவசாய ஆய்வு	
வரிசை எண்ணும், வட்டமும்.	ஆய்வு நடந்து முடிந்த கிராமங்களின் எண்ணிக்கை.	ஆய்வு நடைபெற்றுக் கொண்டுள்ள கிராமங்களின் எண்ணிக்கை.	ஆய்வு நடந்து முடிந்த கிராமங்களின் எண்ணிக்கை.	ஆய்வு நடைபெற்றுக் கொண்டு உள்ள கிராமங்களின் எண்ணிக்கை.
(1)	(2)	(3)	(4)	(5)
1 சாத்தூர் ..	58	16	42	9
2 திருப்பத்தூர் ..	55	8	32	12
3 பரமக்குடி ..	74	8	25	5
மொத்தம் ..	187	32	99	26

ஆய்வு நடந்து முடிவுபெற்ற கிராமங்களில் (பொறியியல் மற்றும் விவசாயம்) 26 கிராமங்களுக்கான விவர அறிக்கைகள் கொடுக்கப்பட்டுள்ளன. அதில் 17 கிராமங்கள் சாத்தூர் வட்டத்தையும் 9 கிராமங்கள் திருப்பத்தூர் வட்டத்தையும் சேர்ந்தவை.

(b) இத்திட்டத்தின் மூலம் வேளாண்மை அடிப்படை புள்ளி விபரம், மக்கள் தொகை, அவர்களின் வருமானம், தற்போதுள்ள குடிநீர் வசதிகள், போக்குவரவு, மின் விநியோகம் பற்றி விவரம் தொகுக்கப்படுகிறது. மற்றும் எதிர்காலத்தில் முழுமையான திட்டங்கள் வரைய உதவும்படி வரைப்படமும் தயாரிக்கப்படுகிறது.

எட்டு கிராமங்களின் முடிவு செய்யப்பட்டுள்ள விபர அறிக்கைகள் இயக்குநர் ஊரகப் பொறியியல் அளவைத் திட்டம், புதுடில்லி அவர்களுக்கும் மற்றும் இதர மாநில துறை அதிகாரிகளுக்கும் அனுப்பப்பட்டுள்ளது. இதன் மூலம் தகுந்த திட்டங்கள் உருவாக்கவும் நம்முடைய கிராமங்களின் சமூக நிதி நிலை மேம்பாடடைய ஏதுவாகும்.

(*a*) The Rural Engineering Survey Scheme has been introduced in Ramanathapuram district only. Twenty-five parties attached to the Rural Engineering Survey Cell have been divided into three units of 9, 8 and 8 parties with headquarters at Virudhunagar, Karaikudi and Paramakudi respectively. The survey work is in progress from 1st October 1972, 1st November 1972 and 1st January 1973 in Sattur, Thirupattur and Paramakudi taluks.

Out of 1,530 villages in Ramanathapuram District, the Engineering Survey has been completed by the parties in 187 villages and the survey is in progress in 32 villages. On the Agricultural side, the survey has been completed in 99 villages and the survey is in progress in 26 villages as on 30th September 1973.

The progress of the survey talukwise is as follows :—

Serial number and Taluk.	Engineering Survey: Number of villages completed.	Engineering Survey: Number of villages under Survey.	Agricultural Survey: Number of villages completed.	Agricultural Survey: Number of villages under Survey.
(1)	(2)	(3)	(4)	(5)
1 Sattur ..	58	16	42	9
2 Tirupattur ..	55	8	32	12
3 Paramakudi ..	74	8	25	5
Total ..	187	32	99	26

The Rural Engineering Survey reports (Both for Engineering and Agriculture) for 26 villages have been finalised of which 17 villages pertain to Sattur taluk and nine villages to Tirupattur taluk.

(*b*) The Survey envisages collection of data on agricultural statistics, population, their income, compilation of information of existing facilities for drinking water, communication and power supply and also preparation of contour maps for facilitating preparation of fullfledged schemes in future.

Eight numbers of finalised villages reports has been sent to the Director, Rural Engineering Survey Cell, New Delhi and to the various user departments in the State for formulating suitable schemes for the development of the area, and to provide basic amenities for the economic uplift of the villages.